2022 மே 4]

217—

பேருந்து பணிமனை

***7178—திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பல்லடம் தொகுதி, 36–வது வார்டு, கோவில் வழியில் பேருந்து பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பல்லடம் தொகுதி, திருப்பூர் மாநகராட்சி, 36–வது வார்டு, கோவில் வழியில் அரசுப் பேருந்து பணிமனை அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன் அவர்கள்.*

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாநகரில் அமைந்துள்ள திருப்பூர்–1 பேருந்து பணிமனையில் 101 பேருந்துகளும், திருப்பூர்–2 பணிமனையில் 68 பேருந்துகளும், பல்லடம் பணிமனையில் 78 பேருந்துகளும் இயங்கி வருகின்றன. இந்த 3 பணிமனைகளும் பல்லடம் தொகுதி மக்களின் பயன்பாட்டிற்காக இருந்து வருகின்றன. இந்தப் பணிமனைகளில் உள்ள இடப் பற்றாக்குறைக் காரணமாகக் கிட்டத்தட்ட 40 பேருந்துகள் பாதுகாப்பற்ற முறையில் திருப்பூர்–காங்கேயம் சாலையிலும், ஊத்துக்குளி, கொடுமணல், பொங்கலூர் ஆகிய ஊர்களில் உள்ள சாலைகளிலும் நிறுத்தப்படுகின்றன. பேருந்துகள் வரிசையாக நிற்கும் காரணத்தினால், பணிமனைக்குப் பேருந்துகளைக் கொண்டு செல்ல முடியாததால், பேருந்துகளில் பராமரிப்புப் பணிகளைச் சரிவர மேற்கொள்ள முடியாத சூழல் உள்ளது. இவ்வாறான சூழலில், பராமரிப்புப் பணிகள் இரவு நேரங்களில் மேற்கொள்ள முடியாமல், பகல் நேரங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால், பேருந்து வழித்தடத் துண்டிப்பு ஏற்பட்டு, மக்கள் அவதிக்குள்ளாகின்றனர். சரியான பராமரிப்பு இல்லாததால்,*

வழித்தடத்தில் பேருந்துகள் பழுதாகும் நிலை உள்ளது. எனவே, மேற்கண்ட 3 கிளைகளிலுள்ள அதிகமான பேருந்துகளைப் பிரித்து, பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, பழைய 36–வது வார்டு, புதிய 60–வது வார்டு, கோவில் வழியில் உள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் ஒரு பகுதியில் அல்லது பல்லடம் சாலையிலுள்ள ஒரு பகுதியில் பேருந்துப் பணிமனையை உருவாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூருக்கு உட்பட்டது. திருப்பூர் நகரத்தில் ஏற்கெனவே இரண்டு பணிமனைகள் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோலவே, பல்லடத்திலும் ஒரு பணிமனை உள்ளது. ஆனால், அரசாணை எண் 61, போக்குவரத்துத் துறை, நாள் 9–1–1992–ன்படி ஒரு பணிமனைக்கும் மற்றொரு பணிமனைக்கும் இடையே குறைந்தபட்ச தூரம் 40 கிலோ மீட்டர் இருக்க வேண்டும். திருப்பூர் நகரத்தில் 30 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் ஏற்கெனவே 3 பணிமனைகள் அமைந்துள்ளன. எனவே, பல்லடம் தொகுதி, திருப்பூர் மாநகராட்சி, 36–வது வார்டு கோவில் வழியில் அரசுப் பேருந்து பணிமனை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன் அவர்கள்.

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாநகராட்சி வேகமாக வளர்ந்து வரும் பகுதியாகும். அது ஒரு மாவட்டமாக, ஒரு மாநகராட்சியாக உயர்த்தப்பட்டு, மக்கள் அதிக அளவில் வசிக்கக்கூடிய பகுதியாக இருந்து கொண்டிருக்கின்றது. போக்குவரத்துத் துறையின் மூலமாக திருப்பூர் மாவட்டத்திற்கென்று தனியாக திருப்பூர் மண்டலம் 2011 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. தற்சமயம் இம்மண்டல அலுவலகத்தில் திருப்பூர் கிளை–1–ல் வணிகப் பிரிவும், திருப்பூர்

2022 மே 4]

கிளை–2–ல் தொழில்நுட்பப் பிரிவும், பொது மேலாளர் அலுவலகமும் செயல்பட்டு வருகின்றன. இதரப் பிரிவுகள், அலுவலகம் இல்லாத காரணத்தினால் அலுவல் பணிகளுக்கு ஈரோடு மற்றும் கோவைக்குச் செல்ல வேண்டிய நிலையுள்ளது. எனவே, திருப்பூர் மண்டலத்திற்கென தனி அலுவலகம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, அங்கே தேவை இருக்கிறது. ஆனால், நிதி நெருக்கடிச் சூழலில் புதிய அலுவலகம் கட்டுவதற்கான வாய்ப்பு தற்போது இல்லை. இருப்பினும், நிதி நெருக்கடிச் சூழல் சரியான பிறகு எதிர்காலத்தில் அதுகுறித்துப் பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 218, மாண்புமிகு உறுப்பினர் திரு. J.L. ஈஸ்வரப்பன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

218—

பால் குளிரூட்டும் நிலையம்

***5420—திரு. J.L. ஈஸ்வரப்பன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆற்காடு தொகுதி, குண்டலேரி ஊராட்சியில் உள்ள மருதமங்கலம் மற்றும் துர்கம் ஊராட்சியில் உள்ள முகமதுபேட்டை ஆகிய பகுதிகளில் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆற்காடு தொகுதி, குண்டலேரி ஊராட்சியில் உள்ள மருதமங்கலம் கிராமம் மற்றும் துர்கம் ஊராட்சியில் உள்ள

TRUTH ALONE TRIUMPHS